**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.127/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 7<br>Defense<br>Court |
| Name | திருமதி. நம்பிநாச்சியார் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு compro அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of May 2025.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். எதிரியை தெரியும். என்னுடைய ஊர்க்காரர். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நான் எனது மகள் வீட்டிற்கு சென்றிருந்தபோது மகளுடைய மாட்டை மேய்ச்சல் கொண்டு வந்தேன். அப்போது மணி மாலை 5 இருக்கும். எதிரி என்னுடன் வந்து பேசினார். அப்போது எனது மகள் என்னிடம் வந்து எதிரியிடம் பேசவேண்டாம் என சொன்னார். எதிரி என் மகளை பிடித்து கீழே தள்ளி 2 முறை தொடையில் மிதித்தார். என்னையும் கீழே தள்ளினார். வழக்கு சம்பவத்தின்போது ஆறுமுகம் என்பவரும் மற்றும் சில நபரும் பார்த்தார்கள். சம்பவம் எங்கள் ஊருக்கு வடக்கே உள்ள வயற்காட்டில் நடந்தது. எதிரி ஓடிவிட்டார். எனது மருமகனும், மகளும் காவல்நிலையத்திற்கு சென்ற புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மேலநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு 3 மகன், ஒரு மகள் உள்ளனர். மருமகன் விவசாயம் செய்து வருகிறார். மகள் வீட்டில் எத்தனை நாட்கள் இருப்பீர்கள் என்றால் ஒரு மாதம் இருப்பேன். எனக்கும்

எதிரி இசக்கிக்கும் பிரச்சனை உள்ளதா என்றால் எனக்கும் எதிரிக்கும் சமபந்தமில்லை. எனது மகளுக்கும் எதிரி இசக்கிக்கும் முன்விரோதம் உள்ளதா என்பது தெரியுமா என்றால் தெரியாது. நான் எத்தனை மாடு மேய்த்தேன் என்றால் 3 மாடுகள் மேய்த்தேன். நான் மாடுகளை மேய்ச்சலை முடித்து வீட்டிற்கு வரும்போது தான் சம்பவம் நடந்தது. நான் மேய்ச்சலுக்கு எத்தனை மணிக்கு கொண்டுசென்றேன் என்றால் நான் மேய்ச்சலுக்கு செல்லவில்லை. மாடுகளை பத்தி கொண்டு வர சென்றேன். நான் மாடுகளை பத்தி கொண்டுவரும்போது எனது மகள் எங்கே இருந்தார் என்றால் எனது மகள் வீட்டில் இருந்தால் அப்போது மாடுகள் காணவில்லை என தேடி வந்தார்.

எதிரி என்னிடம் என்ன பேசினார் என்ற விபரம் சொல்லதெரியவில்லை. எதிரி எனக்கு உறவினர் இல்லை, ஊர்க்காரர். தெருவில் சம்பவம் எங்கே நடந்தது என்றால் வயற்காட்டில் நடந்தது. யார் வயற்காடு என தெரியாது. சம்பவத்தை எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்றால் என் அருகில் இருந்த நபர்கள் 6 பேர். எதிரியை பிடிக்க யாரும் வரவில்லை. சம்பவம் நடந்தவுடன் எனது மகளும் மருமகனும் காவல்நிலையம் சென்று புகார் கொடுக்க சென்றுவிட்டார்கள் என்றால் ஆம்.

நான் எனக்கு நடந்த சம்பவம் பற்றி கூற காவல்நிலையம் சென்றேனா என்றால் செல்லவில்லை. தாக்குதலில் எனது மகளுக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. எனது மருமகனின் அண்ணன் மகன் பெயர் இசக்கிமுத்து. இசக்கிமுத்துவுக்கு ஊரில் உள்ள கோவில்விளக்கு களவு போனது சம்பந்தமாக குற்றஞ்சாட்டபட்டது என்றால் சரிதான். அதுசம்பந்தமாக எதிரி கேட்டதால்தான் பிரச்சனை என்றால் சரிதான். நான் சொல்வது போன நான் சொன்ன தேதியில் எனது மகளையும் என்னையும் யாரும் தாக்கவில்லை என்றும், நான் சொன்ன மாதிரி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எவ்வளவு நேரம் சம்பவம் நடந்தது என்றால் ½ மணி நேரம் நடந்தது. எதிரி சம்பவயிடத்திற்கு எதில் வந்தார் என்றால் ஞாபகமில்லை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 127/2018 |
| Preliminary register | |
| Sessions | |
| Deposition Of Witness for | Prosecution PW 6<br>Defense<br>Court |
| Name | திரு. சுப்பிரமணியன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

*எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of May 2025.

நான் தற்போது 31.07.2019 ம் தேதி திருக்குறுங்குடி காவல்நிலையத்திலிருந்து பணிஓய்வில் சென்றுவிட்டேன். மூன்றடைப்பு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது 11.12.2017 ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது மருதகுளம் கீழதெரு ராமையா மனைவி லெட்சுமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண். 147/2017 இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2) மற்றும் 4 of TNPHW Act வழக்கை பதிவு செய்தேன். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபர் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்திருந்தார்இன்டிமேசன் எங்களுக்கு வரும் என்றால்

சரிதான். இவ்வழக்கில் அவ்வாறு இன்டிமேசன் வந்ததால் என்றால் இல்லை. சம்பவம் நடந்து காலதாமதாக புகார் மனு அளித்தால் அதற்கான காரணங்கள் எழுதவேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார்மனு காலதாமதாக கொடுக்கப்பட்டதாக எனக்கு தெரியவந்ததா என்றால் சரியான நேரத்தில்தான் கொடுத்தார்கள். நான் சொன்ன தேதி, சொன்ன நேரத்தில ் எந்த புகார் மனு கொடுக்கப்படவில்லை என்றும், வழக்கு பதிவுசெய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.